சுடர் 14 கதிர் 1

# மிட்ஸ் ஐக்கிய சுடர்

ஜனவரி - மார்ச் 2023

மும்மாத இதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்



ஆதரவாளர்கள்

**மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ்**
தலைவர் - மிட்ஸ்

**அருட்தந்தை. ஜாண்குமார் K.**
இயக்குநர் - மிட்ஸ்

ஆசிரியர்

**திரு. M.G. ஜோசப் பேட்ரிக் ஆன்றனி,**
M.S.W., LL.B.,

ஆசிரியர் குழு

**திருமதி. விஜயா .M**
**திரு. தேவராஜ் .V**
**திருமதி. ரீனா .P**
**திருமதி. பேபி சரோஜா .A**
**திருமதி. ஷிஜி .A**
**திருமதி. ஷைலா ராணி .T**

தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
**திருமதி. V. சுனி**

வெளியீடு

**மிட்ஸ்,**
இடைவிளாகம் - கழுவன்திட்டை
குழித்துறை - 629 163, குமரி மாவட்டம்.

Ph : 04651-263390, 295690
Email : mids.marthandam@gmail.com
Website : mids.org.in

அச்சிட்டவர்

**நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
நாகர்கோவில்

************************

**தனிச்சுற்றுக்கு மட்டும்**

************************

# உள்ளே ...

1. இயக்குநரிடமிருந்து .................................. 3
2. புற்றுநோய் .............................................. 4
3. நிகழ்வுகள் .............................................. 5
4. “நீ சிரித்தால் சிங்காரி; சீறி எழுந்தால் சுனாமி” ................... 6
5. உலர் திராட்சையின் மருத்துவ குணங்கள் ...... 7
6. அழகும் ஆபத்தும் .................................. 8
7. கவிதைகள் .............................................. 8
8. தண்ணீர் .................................................. 9
9. கடி! சிரி! ............................................. 10
10. இஞ்சியின் நன்மைகள் ............................ 10
11. மதுவிலக்கு ............................................ 10
12. தொழில் முனைவோர் பயிற்சி ................. 11
13. புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம் ......... 11
14. பிற நிகழ்வுகள் ...................................... 12
15. படித்து ரசிக்க ....................................... 12
16. அனுபவ பகிர்வு - வீரமங்கை திருமதி. வி. வயலா ...... 13
17. மகளிர் தின விழா ................................ 14
18. தொழில் முனைவோர் பயிற்சி ................. 15
19. உலக தன்னார்வத் தொண்டு நிறுவன தினம் (NGO) ...................................... 16
20. மிட்ஸ் குடும்ப வளர்ச்சி திட்டம் ............. 17
21. தமிழ்நாட்டின் அமைச்சர் - அறிந்துகொள்வோம் (2023) ........ 18
21. குறுக்கெழுத்துப் போட்டி ......................... 19
22. Cancer Day Fund Collection Clusterwise List 2023 .............................................. 21





# இயக்குநரின்
## இதயத்திலிருந்து....

**இயக்குநரின் சிந்தனை துளிகளோடு ....**

அன்பிற்கினிய ஐக்கிய சுடர் வாசகர்களே! உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். புதிய வருடத்தில் புதிய சிந்தனைகளுடன், சாவால்களோடு பயணிக்கும் உங்கள் வாழ்க்கையில் மகிழ்சியும் புத்துணர்ச்சியும் எழுவதாக !.

அமைதி அல்லது ஷாலோம் என்னும் யூத வாழ்த்து வெறும் மோதல்/ பிணக்கு இல்லாமையை மட்டும் குறிக்கவில்லை. ”வாழ்த்தப்பெறுபவர் கடவுள் கொடுக்கக்கூடிய அனைத்து நீதியையும் நன்மையையும் பெறுவர்” என்ற விருப்பத்தையும் இது வெளிப்படுத்துகிறது. அதன் மிக ஆழமான அர்த்தம், கடவுள் உங்களுக்குக் கொடுத்த மிக உயர்ந்த நன்மை என்பது, மனித நேயத்தை காப்பதே ஆகும். அமைதி என்பது சமூகத்தின் பொது நலனில் ஒற்றுமை மற்றும் அக்கறை ஆகிய உணர்வுகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த ஒரு நடத்தை ஆகும். எனவே அமைதி என்பது மனிதநேயத்தின் சிறந்த ஒரு அங்கமாகும்.

நாம் அமைதிக்கு களங்கம் ஏற்படுத்தும் உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இன்று பணக்காரர்கள் மற்றும் சக்திவாய்ந்தவர்களின் ஆதிக்கம், காலநிலை மாற்ற அவசரநிலைகள், மோசமான முதலாளித்துவம், போர் மற்றும் வகுப்புவாத கலவரங்கள் போன்ற கவலை யளிக்கும் சம்பவங்களால் வன்முறை, வறுமை, மற்றும் துயரங்கள் என மனித வாழ்வு விளிம்புநிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி 54வது உலக அமைதி நாளாகக் குறிக்கப்பட்ட அன்று, திருத்தந்தை பிரான்சிஸ் உலகில் அமைதிக்கான அக்கறைக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் ஒரு திசை காட்டியாகக் தேவலாயங்களின் சமூகக் கோட்பாடுகள் இருக்கும் என்று தனது செய்தியில் தெரிவித்தார். மேலும் மனிதகுலத்தின் நலனுக்காக உழைக்க வேண்டும் என்றும், அக்கறைக் கலாச்சாரம் இல்லாமல் அமைதி இல்லை என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார். எனவே மனிதநேயமும், அமைதியும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவை என கூறலாம்.

அமைதியைக் கட்டமைப்போம் என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, அனைவரையும் கைகோர்த்து, ஒன்றுகூடி, திருத்தந்தை பிரான்சிஸ்ஸின் அமைதிச் செய்தியைப் பரப்புவதற்கு அழைப்பு விடுக்கிறது. மனிதனின் அரக்ககுணம் மற்றும் காலநிலை நெருக்கடி காரணமாக மக்களின் அடிப்படைத் தேவைகள் சமரசம் செய்துகொள்ளப்படும் சூழ்நிலையில் இக்கருத்து முக்கியம் பெறுகிறது. அமைதியைக் கட்டமைத்தல், அனைவருக்கும் நியாயமான மற்றும் சமமான நீதியை அடைய மற்றும் பாதுகாப்பாக வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வழி வகுக்கும்.

எனவே, தை மாத பொங்கல் விழா, உலக புற்றுநோய் தினம் மற்றும் உலக மகளிர் தினவிழாவில் சிறப்பாக பங்கேற்ற உங்களனை வருக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்றும் அன்புடன்,
Fr. **ஜாண்குமார் K**
இயக்குநர், மிட்ஸ்




Dr. **மினி** (செருப்பாலூர்)



உடலானது பல கோடி செல்களினால் உருவாக்கப்பட்டது. சாதாரணமாக செல்கள் இரண்டாக பிளவுபடும். அவை மடியும் போது புதிய செல்கள் உருவாகி அவற்றை ஈடுசெய்யும்.

செல்கள்கட்டுப்பாடற்று பிரிந்து பெருகுவதால் வரும் நோய் தான் புற்றுநோய்.

புற்றுநோய் என்பது உடல் செல்களின் அசாதாரண பெருக்கம் என வரையறுக்கப் படுகிறது.

இரத்தப்புற்றுநோய் (Leukemia) போன்ற குறிப்பிடத்தக்க விதிவிலக்குகளுடன், பெரும்பாலான புற்றுநோய் செல்கள் கட்டிகளின் வடிவத்தில் காணப்படுகின்றன.

இரத்தப்புற்றுநோய், இரத்த உற்பத்திக்குக் காரணமான எலும்பு மஜ்ஜையின் திசுக்களைப் பாதிக்கிறது. இந்த வகை புற்றுநோய் அபாயகரமானது.

## புற்றுநோயின் வகைகள்

### 1. பரவாப் புற்றுநோய் (Benign)

இது உடலின் மற்ற பாகங்களுக்குப் பரவுவதில்லை. பொதுவாக வளரும். ஆனாலும் மருத்துவரின் ஆலோசனைத் தேவை.

### 2. பரவும் புற்றுநோய் (Malignant)

புற்றுநோய் உருவாகும் போது செல்கள் அசாதாரணமாக பிரிந்து, கட்டி எனப்படும் வளர்ச்சியை உருவாக்குகின்றன. முதிர்ச்சி யடைந்த நிலையில் குருதி வழியாகவோ, நிணநீர் வழியாகவோ உடலின் மற்று பாகங்களுக்கு பரவும்.


உலக சுகாதார நிறுவனம் ஐந்து முக்கிய காரணிகளைப் பட்டியலிடுகிறது.

- புகையிலைப் பொருட்களை உட்கொள்வது
- மது அருந்துதல்
- உடல் எடை அதிகமாக இருப்பது.
- உடல் உழைப்பு இல்லாமை
- குறைந்த அளவில் பழங்களையும், காய்கறிகளையும் உட்கொள்வது.

இதில் அதிக நபர்களுக்கும் புற்றுநோய் வரக்காரணமாக இருப்பது புகையிலைப் பழக்கம். உலக அளவில் 22% மக்களின் புற்றுநோய் பாதிப்புக்கு காரணமாக இருப்பது புகையிலை. புகைப்பிடித்தல் மட்டுமல்ல, வேறு எந்த வகையில் புகையிலைப் பொருட்களை உட்கொண்டாலும் புற்றுநோய் வர வாய்ப்பு அதிகம்.

புற்றுநோய் உடலில் எங்கு வேண்டுமானாலும் உருவாகலாம். ஆனால் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகள் வயிறு, நுரையீரல்,கல்லீரல், பெருங்குடல் மற்றும் மார்பகம் ஆகிய உறுப்புக்களிலாகும்.

புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிவதே நோய் தாக்கியவரை மீட்பதின் முதற்படி.



## நுரையீரல் புற்றுநோயின் அறிகுறிகள்

நாள்பட்ட இருமல், சளியில் இரத்தம் , நாள்பட்ட மார்பு வலி, சோர்வு, மூச்சு விடுவதில் சிரமம், எடை இழப்பு, தலைவலியுடன் உடல் மற்றும் மூட்டுவலி பேச்சில் மாற்றம் (கரகரப்பு) ஆகியவை.

## வயிற்று புற்றுநோய்கான அறிகுறிகள்

பசி இல்லாமை, எடை இழப்பு, வயிற்று வலி, வீக்கம், நெஞ்செரிச்சல், செரிமானக் கோளாறு, குமட்டல், இரத்தத்துடன் கூடிய அல்லது சாதரண வாந்தி

## மார்பகப் புற்றுநோயின் அறிகுறிகள்

வீங்குதல், காம்பிலிருந்து இரத்தம் வடிதல், சிவந்து வீக்கமடைந்த மார்புக் காம்பு, பெரிதாகுதல், கல் போன்று கடினமாகுதல், எலும்புவலி, முதுகுவலி, அக்குள் பகுதியில் வீக்கம் வலி, சிவந்திருத்தல், ஒரு பகுதி மற்ற பகுதியை விட வித்தியாசமாக உணரப்படுதல்.

## தடுப்பு நடவடிக்கைகள்

- புகையிலை, மது போன்றவற்றை தவிர்ப்பது
- பான், பான் மசாலா போன்ற சுவைக்கும் வகை புகையிலைப் பொருட்களைத் தவிர்ப்பது
- சுகாதாரமற்ற சூழலைத் தவிர்த்தல்
- முறையற்ற உடலுறவைத் தவிர்த்தல்
- உள்ளுறுப்புகளை சுத்தமாக வைத்திருத்தல்
- உடல் எடையை சரியாக பராமரிப்பது
- மாதவிடாயை மாற்றக்கூடிய மாத்திரைகள் உட்கொள்வதைத் தவிர்ப்பது
- பழங்கள் மற்றும் காய்கறிகளை அதிகமாக உணவில் சேர்த்துக்கொள்வது
- உடற்பயிற்சிகள் செய்தல்

புற்றுநோய் பாதிப்பின் அளவு அதிகரித்து வரும் சூழலில், சரியான விழிப்புணர்வும், சீரான பழக்க வழக்கமும் இருந்தால் நோயின் அறிகுறிகளை அலட்சியம் செய்யாமல், மருத்துவரின் ஆலோசனைப்படி நடந்து கொள்வது மிகவும் அவசியம்.

# நிகழ்வுகள்

1. 4.02.2023 அன்று தளிர்கள் உலக திட்டத்தில் புதிதாக பயனாளிகளாக சேர்க்கப்பட்ட 12 மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் மிட்ஸ் திட்டங்களை குறித்த வழிகாட்டுதல் பயிற்சியானது மிட்ஸ் திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் அவர்களால் வழங்கப் பட்டது.



2. 08.02.2023 அன்று மிட்ஸ் எழுவோம் இயக்கம் சார்பில் Sri Ram Foundation மற்றும் மிட்ஸ் நிறுவனமும் இணைந்து மாத்தூர்கோணம் பங்கில் வைத்து இலவச புற்றுநோய் பரிசோதனை முகாமினை நடத்தியது. இம்முகாமில் மொத்தம் 19 பயனாளிகள் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனை பெற்றனர்.



**Dr. ராஜம் தேவராஜ்**
சீரான்விளை,
கொடுங்குளம்

# "நீ சிரித்தால் சிங்காரி; சீறி எழுந்தால் சுனாமி"



யார் அங்கே
யார் அங்கே !
வரப் போகும் வானராணிக்கு
வரவேற்போ? இத்தனையும்
வானவில்லும் மேளதாளங்களும் . . . எதற்காக ஓ !
அது வசந்தத்தின் வரவு என்பதலா . . .
கருமேக கூட்டத்தில் பூத்த வெள்ளைப்பூவே
உன் வரவால்
காதல் கொண்டவளைப் போல் களிப்புற்று போனேனே !
நீ . . .
தானாக வரமாட்டாயோ
உன் வரவுக்கு
மேகம் என்ன தூதுவனா?
என்ன இங்கே . . .
வழிந்தோடுவதெல்லாம்
பளிங்குக் கல்லில் பனிமுத்துக்களா? இல்லை
பூமிக்குப் புன்னகையைக் கொடுத்த ரோஜா மொட்டுக்களா . . .
அழகான
நீல ஆடையில் தொக்கிய வெண்முத்துக்களாய்
சிந்தியதெல்லாம் இங்கே
சித்திரமானது . . .
புரிகிறது ! நீ
வலிமையானவள் என்று
நீர் பெண்ணே!
நீ ஒரு பேராசைக்காரி
இல்லை இல்லை
பெருமைக்காரி
உலகில் மூன்று பகுதியை
பிடித்துக் கொண்டாய்
அதனால் தான் . . .
நீ . . .
ஆடிவரும் போது அலை
ஓடிவரும் போது நதி
குதித்துவரும் போது அருவி
ஊறிவரும் போது ஊற்று
மலையில் விழுந்து
கடலில் குவிந்து
நதியில் ஓடி
சமுத்திரத்தில் சங்கமிக்கும்
சரித்திர நாயகியே . . .
நீ சிரித்தால் சிங்காரி
சீறி எழுந்தால் சுனாமி !
நீ . . .
இருப்பதால் தான் இப்பூமி
உயிர்கோளமாய் !
இல்லையென்றால்
இப்பூமி
உருளும் கோளமாய் !
நீரின்றி அமையாது உலகு
ஆம் !
நீயின்றி எதுவும் நடவாது
இதை நான், சொல்லவில்லை புலவன் சொன்னது
உண்மை உண்மை உண்மை
நீர் உண்டால் வாழ்வு
நீ . . . ர் உண்டால் சாவு
வாழ்வுக்கும் சாவுக்கும்

மட்டுமல்ல நீ
புனிதத்துக்கும்
புண்ணியத்துக்கும் நீ . . . தான்

கோடையிலே நீ
கொஞ்சமும் இரக்கமின்றி
பூமிக்குள் ஒளிந்தே
புரட்டுகிறாய் மக்களையே !
தண்ணீர் தராமல்
தண்ணீர் . . . . காட்டுகிறாய் !

வரும்முன்னே காக்காமல்
வறண்ட போதே
வர அழைப்பது
வாடிக்கையாகி விட்டது
என்பதாலா . . .
நீர் பெண்ணே
சில நேரங்களில்
உன் வரவால்
புண்ணிய தேசத்தையே
தண்ணீர் தேசமாக்குகிறாய்
ஏன் !
கால்வாய்களெல்லாம்
களைகட்டும் களிமால்கள் ஆனதாலா?
ஆம் !

ஆழ்கடலில் உன்னை
அனாதையாக துரத்திவிட்டோம்
பல கட்டிட மாடிகளை
அடுக்கடுக்காய் கட்டி வைத்தோம்

மனிதர்களே!

கட்டி அணைக்கும் வசதி நமக்கிருந்தும்
விரயமாய் விட்டுவிடுவதும் ஏனோ?
ஒவ்வொரு துளியும்
உயிரின் துளி மறந்து விடாதே
தண்ணீரைப் பார்ட்டியில் பாட்டிலாய்
அழகு பார்க்கும்
ஆனந்தம் எதற்கு? எதற்கு!

அடேய் !

கல்லணைத் தந்த கரிகாலனே
அணைபல கண்ட காமராஜரே!
வாருங்கள் வாருங்கள்
வெள்ளத்துக்கு வேலியமைக்க . . .

வாழும் மனிதர்களே . . .

நீருக்காக நீங்கள் ஒரு தொட்டியையாவது
கட்டினீர்களா
புதையலைப் புரள விட்டுவிட்டு
பூமியில் என்னதான் தேடுவீர்கள்!

நாளை உன்சந்ததிகளுக்கு
நீ
எதைத் தரப்போகிறாய் ?
தண்ணீரையா
இல்லை
கண் நீரையா . . . சொல்

தண்ணீர் பஞ்சம் வரவேண்டாம் வரவேண்டாம்
தூர் வாராமல் தூங்கிக் கிடக்கின்றன ஏரிகள்
குப்பையால் குவிந்து கிடக்கின்றன குளங்கள்
கிடப்பிடம் தெரியாமல் கிடக்கின்றன கிணறுகள்
ஆக
நதிகள் இணைப்பிலும் நாட்டமில்லா தலைவர்கள் !
மதியோடு திட்டங்கள் தீட்டலாமே
விதியோடு மோதி வெற்றிநடை போடலாமே
தண்ணீரை
சிக்கனமாய் செலவு செய்யலாமே!
மனிதா! ஓ மனிதா!
விழித்துக்கொள்
இப்பொழுதே விழித்துக்கொள்
சத்தமிடு!
சபதமெடு!
யுத்தமொன்று நீருக்காக இல்லையென . . .!




தினசரி உணவிற்குப் பின் காலை, மாலையில் 25 உலர் திராட்சைப் பழங்களை தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட்டால் மூலநோய் குணமாகும்.

உலர் திராட்சை பழங்களை வெதுவெதுப்பான நீரில் ½ மணி நேரம் ஊற வைத்து, காலையில் சாப்பிட்டு வந்தால், பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் மற்றும் இதய நோய் தீரும்.

# அழகும் ஆபத்தும்





இறைவன் படைப்பில் அனைத்தும் அழகானவையே காலையில் சூரியன் உதிப்பது அழகு. மாலையில் வானில் சந்திரன் ஒளிர்வதும் அழகு நட்சத்திரங்கள் விண்மீன்களாய் ஜொலிப்பதும் அழகு. மலையினின்று விழுகின்ற அருவியும் அழகு சுற்றிலும் பரந்து விரிந்து ஆழமாய் கிடக்கின்ற கடலும் அழகு. கோள்கள் பூமியினை சுற்றுவதும் அழகு. வேற்று கிரகங்களை காண்பதும் அழகு. ஆனால் இவற்றையெல்லாம் நாம் ரசித்துக் கொள்ளத்தான் முடியும் அவற்றை அடைய வேண்டும் என நெருங்கினால் ஆபத்து விளையலாம் இதை அறிந்து கொள்ளும் ஆற்றலே மனித அறிவு. மனித இனம் உயிர்வாழக்காரணமான காற்று தென்றலாக வீசி செல்வதும் அழகு. அதே தென்றல் புயலாக மாறுவது போராவத்து.

அழகை மலருடன் ஒப்பிட்டு பேசுகிறார் கவிஞர் கண்ணதாசன் "அழகுக்கும் உறவுக்கும் பேதமில்லை" என்கிறார். மனிதன் வாழ்கின்ற உலகம் அழகால் அலங்கரிக்கப்பட்டவை.அதில் ரசனையுடன் வாழ்தல் மனிதனின் அறிவு ஆகும். அழகு சில நேரங்களில் ஆபத்தினை ஏற்படுத்தும் என்பதற்குச் சான்றாக ஒரு குட்டி கதை வழங்குகிறேன்.

ஒரு மரத்தில் கிளி ஒன்று பெருமையுடன் அமர்ந்திருந்தது. காகம் ஒன்று அதனருகில் வந்தமர்ந்தது. எரிச்சலடைந்த கிளி சீ. . .என்னருகில் வராதே. நான் பேரழகி. நீயோ அருஅருப்பானவள் இங்கிருந்து பறந்து விடு என்றது இதை கேட்டு காகம் மனம் வருந்தியது. என்னை இறைவன் கறுப்பாக அசிங்கமாகப் படைத்து விட்டானே எனப் புலம்பியது. அவ்வேளை, வேடன் ஒருவன் வந்தான் கிளியையும், காகத்தையும் பார்த்தான். கிளியின் அழகு அவனைக் கவர்ந்தது. அம்பு ஒன்றை எய்து கிளியை கீழே வீழ்த்தி விட்டான். கிளி வலி தாங்காமல் ஓலமிட்டுக் கொண்டிருந்தது. இதைப் பார்த்தக் காகம் என்னையும் இறைவன் அழகாகப் படைத்திருந்தால், எனது கதியும் இதுதான் எனக் கூறிக் கொண்டு பறந்து சென்றது. அழகு அழகின் மீது கவர்ச்சிகொண்டு ஆணவத்துடன் செயல்படும் போது அது பேராபத்து விளைவிக்கிறது என்பதற்கு இக்கதை சான்றாகிறது.



## அப்பா

உன் வியர்வை துளிகளும்
என் பாசத் துளிகளும்
ஒன்றாக இணையும் போது (ஏனோ)
என் கண்களில் கண்ணீர் துளிகள்
மடிகின்றது

**திருமதி. றீனா** (அமைப்பாளர்)



## நண்பன்

விழி மூடி திறக்க மறப்பதில்லை
நண்பர்களை பிரிய மனமில்லை
பல கோடி சொத்து பிரிந்தாலும்
நட்பு என்ற சொத்து பிரிவதில்லை



தூக்கி எறிந்த பிறகுதான் தெரிகிறது கையில் இருந்தது "கல்" இல்லை "வைரம்" என்று...

# தண்ணீர்



ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்கு மூல ஆதாரமாக இருப்பது தண்ணீர் மனிதன் உணவு இல்லாமல் கூட உயிர் வாழ முடியும். ஆனால் நீர் அருந்தாமல் ஒரு நாள் கூட இருக்க முடியாது. அந்த அளவிற்கு மனிதரின் வாழ்வில் நீரானது அவசியமாக இருக்கிறது. மனிதர்களுக்கு மடடுமல்லாமல் அனைத்து பறவை, விலங்கின உயிரினங்களுக்கும் நீர் மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கிறது.

மனிதனுக்கும் இயற்கையின் வரமாக கிடைத்தது நீர். நீரானது மனிதருக்கு மட்டும் இல்லை. உயிரினங்கள், தாவரங்கள் போன்ற அனைத்திற்கும் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். உலகில் பிறந்த ஒவ்வொரு உயிரினமும் எதனையோ ஒன்றை சார்ந்து தான் இருக்கின்றன. அதில் மனிதன் தன் வாழ்வில் "நீர" என்பதை அடிப்படை தேவையாக சார்ந்து வாழ்கின்றான்.

நீரானது ஹைட்ரஜன் மற்றும் (H2O) மூலக்கூற்றினால் உருவானது. பூமியில் நீரானது 71 சதவிகிதமாகவும், 28 சதவீகிதம் நிலத்தாலும் உருவாகியுள்ளது. நீரின் சதவிகிதம் தான் அதிகமாக உள்ளது. சமுத்திரங்கள், கடல்கள், ஏரிகள், ஆறுகள், குளங்கள் நீரூற்றுகள் தரைக்கீழ் நீர், பனிக்கட்டி, வளிமண்டலம் போன்றவைகளில் தான் பெரும்பாலும் நீர் தேக்கம் செய்யப்படுகிறது.

## நீரின் முக்கியத்துவம்

திருவள்ளுவர் நீர் இல்லையென்றால் இந்த உலகமே இல்லை என்கிறார். நீரின் முக்கியத்துவம் அந்த அளவிற்கு அமைந்துள்ளது. நீரானது உடல் சூட்டை தணிப்பதற்கும், உடலில் உள்ள அனைத்து உறுப்புகளுக்கும் ஊட்டச்சத்துக் களை கொண்டு போய் சேர்க்கவும் பயன்படுகிறது.

உடலில் உள்ள தேவையில்லதா கழிவுகளை அகற்ற உதவியாக இருப்பது நீர் தான். உமிழ்நீர் போன்ற சுரப்பிகள் சுரப்பதற்கும் நீர் மட்டுமே ஆதாரமாக விளங்குகிறது. நீர் மனித மற்றும் உயிரினங்களுக்கு மட்டு மல்லாமல் விவசாய தொழிலுக்கு தொழிற்சாலைகளுக்கு, உணவு உற்பத்தி போன்ற அனைத்து துறைகளுக்கும் முக்கியத்துவமாக இருக்கிறது.

நம் முன்னோர்கள் அனைவரும் நீரினை அத்தனை வழிமுறைகளோடு பாதுகாத்து வந்தார்கள். நீர் வீணாகிவிட கூடாது என்று குளங்கள், ஏரி போன்று அமைத்து நீர் தேக்கம் கட்டி நீர் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளித்தார்கள். நீர் தேக்கங்களை அழிக்க விடாமல் இன்றைய சந்ததியினர் நாம் தான் அவற்றை பாதுகாப்பாக மேற்கொள்ள வேண்டும்.

நீரை எடுக்கும் பெரும்பாலான தொழிற் சாலைகளை மூட வேண்டும். மழை நீர் சேகரிப்பு திட்டத்தை கடைப்பிடிக்க வேண்டும். காடுகளை அழிப்பதை தவிர்த்துவிட்டு மரம் வளர்ப்பதை மேற்கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிற்கும் நீர் முக்கியத்துவமாக இருப்பதால் நீரினை வீணடிக்காமல் பாதுகாப்பது நமது கடமையாகும். நீரின் முக்கியத்துவம் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு செய்வதற்காக மார்ச் மாதம் 22-ஆம் தேதி உலக தண்ணீர் தினம் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் நீர் இல்லையென்றால் உயிர் வாழ முடியாது என்று நினைத்தால் கண்டிப்பாக நீரினை பாதுகாப்போம்..

**திருமதி. ஷைலா ராணி**
அமைப்பாளர்

## கடி! சீ!

1. பல் டாக்டருக்கு தான் அதிக சொத்து இருக்கும் ஏன்?
   **ஏன்னா அவர் தான் எல்லாருடைய சொத்தையும் பிடுங்குறாரே**
2. எந்த எழுத்தை எழுத முடியாது?
   **தலை எழுத்து**
3. எந்த கடிகாரம் correct ஆ time காட்டும்?
   **எந்த கடிகாரமும் காட்டாது நம்ம தான் பாக்கணும்**
4. கடற்கரைல வீடு கட்டினா என்ன ஆகும்?
   **காசு செலவாகிடும்**
5. கதவு மூடிட்டு தான் மருந்து குடிக்கணும் ஏன்?
   **டாக்டர் மருந்த அறை மூடி குடிக்கணும்னு சொன்னாராம்**
6. எறும்புக்கும் கரும்புக்கும் என்ன வித்தியாசம்?
   **நாம கரும்பை கடிக்கிறோம் எறும்பு நம்மள கடிக்குது**
7. கொக்கு எப்போ ஒத்த கால்ல நிக்கும்?
   **அது ஒத்த கால எப்போ தூக்குதோ அப்பதான்**
8. நம்ம ஏன் தண்ணி தெளிச்சு கோலம் போடுறோம்?
   **கோலம் போட்டு தண்ணி தெளிச்சா கோலம் அழிஞ்சுடும்ல**
9. ஒருத்தனுக்கு interview போறதுக்கே பிடிக்காதாம் ஏன்?
   **ஏன்னா அவங்க அப்பாதான் நாலு பேரு கேள்வி கேட்குற மாதிரி நடந்துக்க கூடாதுனு சொன்னாராம்**
10. நாம எதுக்கு குளிச்ச பிறகு தலைய துவட்டுறோம்?
    **குளிக்கும் போதே துவட்ட முடியாதுல்ல அதான்**

**திருமதி. ஷஜி** (வரவேற்பாளர்)

## இஞ்சியின் நன்மைகள்



நீரழிவு நோயை கட்டுபடுத்த உதவும்
மூளையின் ஆரோக்கியத்தை அதிகமாக்கும்
செரிமானத்தை சீராக்கும்
மூக்கடைப்பை அகற்றும்
கோலஸ்ட்ராலின் அளவை ஒழுங்குப்படுத்தும்
பாக்டீரியா மற்றும் பூஞ்சை தொற்றை தடுக்கும்
வீக்கத்தை ஆற்றும்
குமட்டலை குறைக்கும்

## மதுவிலக்கு



குடும்பம் கெடுக்கும்
கள்ளு - போதை
கொடுக்கும் அமிதைத் தள்ளு
உடம்பைத் துளைக்கும் புகை புகையே
உடம்பை முடுக்கும் பகை
மக்கள் மனைவி எல்லாம் - குடியால்
முக்காலம் அடையும் துன்பம்
மக்களை மிருகம் என்றே முதியோர்
மதிப்பாருப்பா குடிபாரை


துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்து விடு ஆனால் அது கற்றுத் தந்த பாடத்தை எப்போதும் நினைவில் வைத்துக்கொள்.

# தொழில் முனைவோர் பயிற்சி





குடும்ப வளர்ச்சி திட்டத்தின் வழியாக தற்போது 450 குடும்பங்கள் பயன்பெற்று வருகின்றன. அவர்களுக்கு 12.01.2023 மற்றும் 13.01.2023 ஆகிய இரண்டு தினங்களில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து திரு.அலோசியஸ் அவர்களால் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். பயிற்சியில் சிறு தொழில் செய்வதன் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. பின்னர் இந்த திட்டம் வழியாக ஆறாண்டுகள் பயன் பெற்ற திருமதி.வைலா அவர்கள் இந்த திட்டம் வழியாக தங்கள் குடும்பம் அடைந்த நன்மைகள் குறித்த தங்கள் அனுபவத்தை பகிர்ந்தார்கள். பின்னர் பயனாளிகளுக்கு திட்டத்தின் வழிமுறைகளும், அவற்றை கையாளும் வழிமுறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் 200 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

# புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம்

ஆண்டுதோறும் உலகளவில் பிப்ரவரி 04-ம் நாள் அனுசரிக்கப்படும் புற்றுநோய் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மிட்ஸ் நிறுவனம் மிட்ஸ் எழுவோம் இயக்கம் என்ற திட்டத்தின் வழியாக காரிதாஸ் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து விழிப்புணர்வு பிரச்சாரத்தினை நடத்தி வருகிறது. இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 05-ம் நாள் மாலை 3 மணி முதல் 5 மணி வரை 163 பகுதிகளில் விழிப்புணர்வு நோட்டீஸ்கள், போஸ்டர்கள் ஆகியவற்றின் மூலம் புற்றுநோய் குறித்த தகவல்கள், புற்றுநோய் வராமல் நம்மை பாதுகாப்பது எப்படி?, புற்றுநோயை கண்டறிந்தால் அதற்குரிய முதல்கட்ட மருத்துவ சிகிட்சைகளை மேற்கொள்வது எப்படி என்பது குறித்த பல்வேறு தகவல்கள் மக்களை சென்றடையும் நோக்கத்தில 577 சுய உதவி குழு மற்றும் கோல்பிங் குடும்பங்கள் கலந்து கொண்டு பிரச்சாரங்கள், விழிப்புணர்வு கூட்டங்கள் ஆகியவற்றை நடத்தி மக்களுக்கு விழிப்புணர்வு அளித்தனர். இந்த பிரச்சாரங்களில் மருத்துவர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள், அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், பங்கு மக்கள், மிட்ஸ் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# பிற நிகழ்வுகள்

07.01.2023 அன்று கோல்பிங் நிர்வாக குழு கூட்டம் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.


09.01.2023 அன்று குடும்ப வளர்ச்சி திட்டத்தின் வருடாந்திர திட்டமிடல் கூட்டம் மிட்ஸ் இயக்குநர் தலைமையில் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

09.01.2023 அன்று மிட்ஸ் மற்றும் ஆஸ்திரேலியாவை சேர்ந்த திரு. கிரேக் கோலண்ட் அவர்களின் உதவியுடன் மிட்ஸ் பணி மண்டலங்களில் உள்ள 35 பயனாளிகளுக்கு 350 கோழிகள் வழங்கப்பட்டன. பயனாளிகளின் இல்லங்கள் சந்திக்கப்பட்டது.

17.01.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மிட்ஸ் பணியாளர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. விழாவினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் முன்னின்று நடத்தினார்கள்.





## படித்து ரசிக்க

- படபடக்கும் பளபளக்கும் நம் மனதை நடுங்கவைக்கும் அது என்ன?
  **பட்டாசு**
- தலையில் கிரீடம் வைத்து தங்கப்பழம் அது என்ன? - **அன்னாசிப்பழம்**
- நிலத்தில் முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி? - **முடி**
- கையை வெட்டுவார், கழுத்தை வெட்டுவார் ஆனாலும் நல்லவர் அது என்ன?
  **தையல்காரர்**
- கையில்லாமல் நீந்துவான் கால் இல்லாமல் ஓடுவான் அவன் யார்?
  **படகு**
- வீட்டுக்கு வீடும் ஆச்சு, கூட்டுக்கு கூடும் ஆச்சு ___ அது என்ன?
  **நத்தையின் ஓடு**


நடக்கும் என்று நம்புங்கள் - அது உங்களை மட்டுமல்ல உங்களை சுற்றி இருப்பவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும்..!

# அனுபவ பகிர்வு வீரமங்கை திருமதி. வி. வயலா....

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராத்தூர் என்னும் ஊரில் 3 சென்ட் நிலத்தில் சாலை அருகில் வாழ தகுதியற்ற நிலையில் இடிபாடுகளுடன் கூடிய சீட் வீட்டில் கணவர் மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்தவர் தான் நம் கதாநாயகி திருமதி.வயலா. . . . கணவர் சாலை விபத்தில் சிக்கி வேலை ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலை . . . திருமதி.வயலா பல நோய்களால் அவதிப்பட்டு, வேலை செய்ய இயலாமல் வாழ்ந்த தருணம். அவ்வேளையில் மிட்ஸ் குடும்ப வளர்ச்சி திட்டத்தின் குழுமமானது அவர்களின் பரிதாப நிலையை கண்டுணர்ந்து திட்டத்தில் சேர வழி வகுத்தது. முதல் கட்டமாக ஆடு வாங்க உதவி தொகையானது வழங்கப்பட்டது. ஆடு வாங்கி வளர்த்ததில் திருமதி.வயலா பெரிய பின்னடைவைச் சந்தித்தார்கள். வியாபாரம் செய்ய தக்க இடமாக சாலை அருகில் வீடு இருந்ததால் மிட்ஸ் அறிவுரையின் படி இரண்டாவது கொடுக்கப்பட்ட தொகையை கொண்டு தனது வீட்டின் முன்னால் ஒரு பலசரக்கு கடை ஆரம்பிக்கலாம் என்று தீர்மானித்து வியாபாரத்தை துவங்கினார்கள். தொடக்க காலத்தில் வியாபாரம் சற்று தோல்வியை சந்தித்தது என்றாலும் நாளடைவில் முன்னேற்றப்பாதையில் செல்ல தொடங்கியது.

பின்னர் அடுத்த கட்ட உதவித்தொகையும் முன்னால் உள்ள முதலீடும் சேர்த்து பலசரக்கு கடையை மட்டுமல்லாமல் தேங்காய் கொள்முதல் வியாபாரத்திலிலும் ஈடுபடுத்தி தேங்காய் எண்ணெய் விற்பனையும் நன்முறையில் நடத்தி வருகிறார்.

கொரோனா கால கட்டத்தில் பிள்ளைகளின் படிப்பு செலவு, குடும்பச்செலவு இவைகளுக்கு இக்கடையின் வருமானத்தால் தான்நிலை நிறுத்தப்பட்டது. குடும்ப வளர்ச்சி திட்ட அடுத்த கட்ட நிதியால் ஒரு தையல் மிஷின் வாங்கி துணி தைத்து நன்முறையில் இலாபம் ஈட்டி வருகிறார். மேலும் 20 நல்ல தரமான நாடன் கோழிகளை வாங்கி வளர்த்தி அதன் மூலமும் வருமானத்தை உருவாக்கி, வசிப்பதற்கு இதமாகவும் வீட்டையும் சற்று பழுதுபார்த்து மகிழ்சியோடு வாழ்கின்றனர். இவ்வாறாக பல தொழில்கள் செய்து தன்னிறைவோடு வீர நடைபோட்டு வருகிறார்கள். அவர்களுடைய கனவு நல்ல ஓர் புதிய வீடு கட்டுவதும், பிள்ளைகளை நன்றாக படிக்கவைப்பதுமாகும். மேலும் தனக்கு கிடைத்த மிட்ஸ் குடும்ப வளர்ச்சி திட்டத்தினால் ஆன வெற்றியை மிட்ஸில் நடத்தப்படும் பல பயிற்சியின் போது அனுபவ பகிர்வு வாயிலாக வெற்றி பயணத்தை பிற பயனாளிகளுக்கு பங்கு வைக்கிறார்கள். இவ்வாறாக தனக்கு கிடைத்த சிறு உதவியை கொண்டு தன்னாலும் சாதிக்க முடியும் என்று தன்னம்பிக்கையோடு வெற்றி உலா வரும் திருமதி.வயலா சாதிக்க துடிக்கும் பெண்களுக்கு ஓர் முன்மாதிரியாக திகழ்கிறார்.





# மகளிர் தின விழா



மிட்ஸ் களியக்கவிளை பணிமண்டலம் சார்பாக உள்ள குழுக்களின் மகளிர் தின விழா கொண்டாட்ட நிகழ்வுகள் அனைத்தும் 08-03-2023 அன்று சுமார் 2.30 மணியளவில் ஆரம்பமானது. மிட்ஸ் பெண்கள் அரசி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. ஷீஜா அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். மிட்ஸ் இயக்குநர் மற்றும் மண்டல இயக்குநர் வருகை புரிந்து வாழ்த்துரை வழங்கினார்கள்.



நிகழ்விற்கு கன்னியாகுமரி அரசுத் தோட்டக்கலை இயக்குநர் திருமதி. ஷீலா அவர்கள் உரையாற்றினார்கள். மக்கள் இயற்கை விவசாயங்களை சார்ந்து வாழ வேண்டும் எனவும், இவ்வருடம் நவதானிய வருடம் எனவும் கம்பு, சோளம், கேழ்வரகு, . . . போன்ற தானியங்களை உண்ணவேண்டும் எனவும் கருத்துரை வழங்கினார்கள். மார்த்தாண்டம் மலங்கரை கத்தோலிக்க கல்லூரி தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அடிகளார் தமது வாழ்த்துரையில் பெண்கள் கடவுளின் படைப்பாற்றல் நிறைந்தவர்கள் மற்றும் சத்தி வாய்ந்தவர்கள், அன்பானவர்கள் என்றும் அனைத்து மகளிரையும் வாழ்த்தினார்கள்.



கல்லூரி பேராசிரியை பிபிஷா அவர்களின் கருத்துரையில் ஆண்களுக்கு பெண்கள் நிகர் என்றும் சிறுகுழந்தை முதல் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் சமமான வேலை வாய்ப்புகளை வழங்கவேண்டும் எனவும் இவை குடும்பத்திலிருந்தே உருவாக வேண்டும் என்னும் சிறப்பு கருத்துரை வழங்கினார்கள்.



திருமதி.விஜய லெட்சுமி அவர்கள் மிட்ஸ் வழியாக தனக்கு கிடைக்க பெற்ற அனுபவத்தை (ஆரிபயிற்சி, தொழிற்பயிற்சி, விழிப்புணர்வு, கருத்துரை) பகிர்ந்து கொண்டார்கள். தான் இப்போது சுயமாக அரசு அங்கீகாரத்துடன் வேலைசெய்து வருவதாகவும், இதன் வழியாக தனது குடும்பத்திற்கு ஒரு நிலையான வருமானம் கிடைத்துள்ளது என்றும் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்கள்.



மேலும் கன்னியாகுமரி மாவட்ட பஞ்சாயத்து கவுன்சிலர் திருமதி. லூயில் அவர்கள் பெண்கள் தினவிழா நல்வாழ்த்துகளை வழங்கினார்கள். இவ்விழாவில் களியக்கவிளை பணிமண்டல குழுக்கள் சார்பாக மூன்று நபர்கள் வீதம் சுமார் 400 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

பெண்கள் கூட்டமைப்பு செயலர் திருமதி.இந்திரா மேபல் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். பின்னர் தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

# தொழில் முனைவோர் பயிற்சி



குடும்ப வளர்ச்சி திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளுக்கு 09.02.2023 மற்றும் 10.02.2023 ஆகிய இரு தினங்கள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து திரு.அலோசியஸ் அவர்களால் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். பயிற்சியில் சிறு தொழில் செய்வதன் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டது. பின்னர் இந்த திட்டம் வழியாக ஆறாண்டுகள் பயன் பெற்ற திருமதி.வைலா மற்றும் திருமதி.சத்தியபதி ஆகியோர் இந்த திட்டம் வழியாக தங்கள் குடும்பம் அடைந்த நன்மைகள் குறித்த தங்கள் அனுபவத்தை பகிர்ந்தார்கள். பின்னர் பயனாளிகளுக்கு திட்டத்தின் வழிமுறைகளும், அவற்றை கையாளும் வழிமுறைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் 180 பயனாளிகள் கலந்து கொண்டனர்.







1. விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில், களியக்காவிளை, மார்த்தாண்டம் மண்டலத்தின் 41 சுய உதவி குழுக்களில் உள்ள 164 பயனாளிகளுக்கு ரூபாய் 82,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

2. 31.01.2023 அன்று கோல்பிங் சிறு தொழில் கடன் உதவி திட்டத்தின் வழியாக கோல்பிங் குடும்பங்களில் உள்ள 12 உறுப்பினர்களுக்கு ரூபாய் 12,00,000/- கடனாக வழங்கப்பட்டது.



3. 06.02.2023 அன்று தளிர்கள் உலக திட்டத்தில் பயன் பெறும் 54 பயனாளிகளுக்கு ரூபாய் 1,78,500 ரூபாய் சிறப்பு உதவித்தொகை வழங்கப்பட்டது.

4. 14.02.2023 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 8 நபர்களின் குடும்பங்களுக்கு நபருக்கு ரூபாய் 5000/- வீதம் ரூபாய் 40,000/- வழங்கப்பட்டது.

# உலக தன்னார்வத் தொண்டு நிறுவன தினம் (NGO)

**திரு. ஷாஜன் ஜோசப்**
மிட்ஸ் திட்ட அலுவலர்

1945 ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் சபையின் சாசனத்தில் 71-வது பிரிவில் அரசுசாரா நிறுவனங்கள் முதன் முதலில் அழைக்கப்பட்டன. NGO-க்கள் சட்டபூர்வமாக உருவாக்கப்பட்ட அமைப்புகள் ஆகும். அவை அரசாங்கத்திலிருந்து சுயமாக செயல்படுகின்றன. மேலும் அவை பொதுவாக இலாப நோக்கமற்றவையாக கருதப்படுகின்றன. அவை சமூக அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள் போன்றவை என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த அமைப்புகள் பொதுவாக சாதாரண குடிமக்களால் அமைக்கப்பட்டவை மற்றும் தொண்டு, சமூக,அரசியல்,மத, அல்லது பிறர்நலன்களைக் கொண்ட பரந்த அளவிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இந்தியாவின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இந்திய சங்கங்கள் பதிவு சட்டம் 1860, மத அறநிலைய சட்டம் 1863, இந்திய அறக்கட்டளை சட்டம் போன்ற பல சட்டங்களில் கீழ் பதிவு செய்யப்படலாம்.

அரசு சாரா நிறுவனங்கள் நீண்ட காலமாக பேரிடர் நிவாரணம் முதல் விளிம்பு நிலை மற்றும் பின்தங்கிய சமூகங்களுக்கு ஆதரவாக பல்வேறு துறைகளில் குறிப்பிட தக்க பங்கை கொண்டுள்ளன. அவர்கள் தற்போது சமூகத்தின் முக்கிய அங்கமாக உள்ளனர். இது நாட்டிற்குள் விரைவான மாற்றத்தையும் சமூக மாற்றத்தையும் கொண்டு வருகிறது. நம் நாட்டில் உள்ள கிராமப்புற ஏழை சமூகங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனுக்காக குறிப்பிட்ட திட்டங்களை வைத்துள்ளனர். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் ஊக்குவிக்கப்படும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் கிராமப்புற ஏழை பெண்களுக்கு சேமிப்பை திரட்டவும், உறுப்பினர்களின் கடன் தேவையை பூர்த்தி செய்வதற்காக அதே கடனை அதன் உறுப்பினர்களுக்கு சுழற்றவும் பயன் உள்ளதாக இருக்கும். வளர்ச்சி நடவடிக்கைகள் எட்டாத உள்கிராமங்களில் வாழும் சமூகங்கள் மற்றும் குடும்பங்களை சென்றடைவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அதிக முயற்சி எடுத்து வருகின்றன. சுற்று சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வேளாண்மைத்துறையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை புறக்கணிக்க முடியாது. இருப்பினும் சமீபத்திய சூழ்நிலைகளில் கடுமையான அரசாங்க கொள்கைகள் மற்றும் சட்டங்கள் காரணமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு இந்திய கடினமான சூழலாக உள்ளது.

கிராமப்புற வளர்ச்சியில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பங்களிப்பை சிறப்பிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 27-அன்று உலக அரசு சாராஅமைப்புகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது. உலக தன்னார்வத் தொண்டு நிறுவனம் 2014 பிப்ரவரி 27 அன்று முதன் முதலில் அனுசரிக்கப்பட்டது. அந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் இது ஏற்பாடு செய்யப்படுகிறது. உலக தன்னார்வத் தொண்டு நிறுவனம் அனைத்து அரசு சாரா நிறுவனங்களையும் ஆண்டு முழுவதும் சமூதாயத்திற்கு பங்களிக்கும் அனைத்து அரசுசாரா நிறுவனங்களையும் அவர்களுக்கு பின்னால் உள்ள மக்களையும் அங்கீகரித்துக் கொண்டாடி கௌரவிப்பதற்காக அர்பணிக்கப்பட்ட ஒரு சர்வதேச தினம் ஆகும். 2023-ஆம் ஆண்டின் உலக அரசு சாரா தினத்தின் கருப்பொருள் ”மனித உரிமைகளை மேம்படுத்துவதில், சமூக மற்றும் சுற்றுச்சூழல் சாவால்களை எதிர் கொள்வதில், மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கு மற்றும் செல்வாக்கு ஆகும்”.

# மிட்ஸ் குடும்ப வளர்ச்சி திட்டம்

